


**29. 01. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, நடப்பாண்டில் 7.4 சதவிகிதமாக இருக்கும் என்று 2025-26ம் நிதியாண்டு பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2. சீர்த்திருத்தங்கள், செயலாக்கம் மாற்றங்களுடன் நம்நாடு வேகமாக முன்னேறி செல்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. ஜவுளி நிறுவனங்கள், அதிநவீன இயந்திரங்கள் வாங்க 20 சதவிகிதம் மானியம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. பல்கலைக்கழ மானியக்குழுவின் 2026-ம் ஆண்டு ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

5. பெஹ்ரைனில் நடைபெறும் மனாமா சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் சிந்தாந்த் பாந்தியா, சாஹேத் மைனேனி இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, நடப்பாண்டில் 7.4 சதவிகிதமாக இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த 2025-26-ம் நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில், 2027-ம் நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 6.8 சதவிகிதம் முதல், 7.2 சதவிகிதத்திற்கு இடையே இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நடப்பாண்டின் பொருளாதாரம் வலுவான நிலையில் இருப்பதாகவும், உள்நாட்டு தேவைகள் தனிநபர் நுகர்வு, மூலதன கட்டமைப்பு, சேவை செயலாக்கம் போன்றவற்றால் விநியோக சங்கிலி வலுப்பெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உற்பத்தி வலிமை பெற்றுள்ளதால் வேளாண்மை நிலைத் தன்மையுடன் இருப்பதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய நெருக்கடியால் பெரிய பொருளாதார நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

சர்வதேச நடவடிக்கைகள் விரைவில் மீட்சியடையும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நிதி நெருக்கடிகள்,

விநியோக சங்கிலி பாதிப்பு, பொருளாதார கொள்கை தொடர்பான கருவிகளை சார்ந்திருப்பது போன்றவற்றையும் ஆய்வறிக்கை எடுத்துரைத்துள்ளது.

பொருளாதார ஆய்வறிக்கை இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் மக்களவை வரும் ஞாயிற்றுக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் மக்களவையில் 2026-27ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை திருமதி. நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்யவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நம் தேசம் நீண்டகால பிரச்சனைகளின் தீர்வுக்கான பாதையில் அடியெடுத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சீர்த்திருத்தங்கள், செயலாக்கம் மாற்றங்களுடன் நம்தேசம் வேகமாக முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

அரசின் நலத்திட்ட உதவிகள் கடைகோடி மக்களையும் சென்றடைவதற்கான நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை வழங்குவதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த பாரத பாதையில் அடுத்த 25 ஆண்டுகள் மிக முக்கியமானதாக இருக்கும் என கூறிய அவர், குடியரசு தலைவரின் நேற்றைய உரை நாட்டின் மீதான 140 கோடி மக்களின் நம்பிக்கையை பிரதிபலிப்பதாக எடுத்துரைத்தார்.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற ஒப்பந்தம் புதிய சந்தைக்கான திறவுகோலாக உள்ளது என்றும், உற்பத்தியாளர்கள் இதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இடையூறுகள் இன்றி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மூலம் நம்நாட்டின் திறன்களையும், ஜனநாயகத்திற்கான அர்ப்பணிப்பையும் உலக நாடுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை வீடு

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இதுவரை ஒருகோடியே 64 லட்சம் வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதாக மத்திய வீட்டுவசதி இணையமைச்சர் திரு. டோக்கான் சாஹு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அமைச்சர், 98 லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப் பட்டிருப்பதாகவும் கூறினார்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருகோடிக்கும் மேற்பட்டோர் இந்த திட்டத்தில் பயனடைந்துள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

அனைவருக்குமான வளர்ச்சி என்ற மத்திய அரசின் தொலைநோக்கு திட்டத்தின் கீழ் சிறுபான்மையின சமூகத்தினருக்கு 22 லட்சம் வீடுகள் SC ST பிரிவினருக்கு 24

லட்சம் வீடுகள், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 42 லட்சம் வீடுகள் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

மகளிருக்கு 90 லட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு. டோக்கான் சாஹு தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பாசறை திரும்பும் நிகழ்வு

நாட்டின் 77-வது குடியரசு தின கொண்டாட்டங்களின் நிறைவாக முப்படைகள் பாசறை திரும்பும் நிகழ்வு புதுதில்லி விஜய் சவுக்கில் இன்று நடைபெறுகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதிமுர்மு, குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்

இந்நிகழ்வு நாட்டின் மதிப்பு மிகு சிறப்பை எடுத்துரைப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தேசத்தின் பெருமிதம் மற்றும் ராணுவ கலாச்சாரத்தின் சின்னமாக இந்நிகழ்வு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

இந்தியா ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரு தரப்பிற்கும் வெற்றி அளிக்கும் உடன்படிக்கையாகும் என்று மத்திய வர்த்தக

தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக காங்கிரஸ் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு சமூக வலைதளத்தில் பதிலளித்துள்ள அமைச்சர், 25 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த உடன்படிக்கை வகை செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

வர்த்தகத்திற்கும், மக்களுக்கும் இதன்மூலம் புதிய வாய்ப்புகள் உருவாக்கும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

எஃகு, அலுமினியம் உள்ளிட்ட அனைத்து பிரிவு ஏற்றுமதியாளர்களின் நலன்களை மத்திய அரசு கருத்தில் கொண்டுள்ளதாக கூறிய அவர், பேச்சுவார்த்தைகள், நம்பகத்தன்மை, பரஸ்பர ஒத்துழைப்பு போன்றவற்றால் கரியமிலவாயு சார்ந்த பிரச்சனைகள் எதிர்கொள்ளப்படும் என்றார்.

தேசத்தின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை தக்கவைக்கும் உரிமை, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு உள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், இந்நடவடிக்கைகள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் முறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ரந்தீர் ஜெய்ஷ்வால்

இந்தியா – அரபு நாடுகளின் இரண்டாவது வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நாளைமறுநாள் புதுதில்லியில் நடைபெறுகிறது.

சூடான், பாலஸ்தீன நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதில் பங்கேற்பதற்காக இந்தியா வந்துள்ளனர்.

இத்தலைவர்களின் வருகை இந்தியா மற்றும் அரபு நாடுகளின் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர்ஜெய்ஷ்வால் சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

அஜித்பவார்

விமான விபத்தில் உயிரிழந்த மஹராஷ்டிர துணைமுதலமைச்சரும் தேசியவாத காங்கிரஸ் தலைவருமான அஜித்பவாரின் இறுதிச்சடங்கு புனே பாராமதியில் இன்று முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றது.

மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. நிதின் கட்கரி, மஹராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னாவிஸ் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

ஜவுளி நிறுவனங்கள், அதிநவீன இயந்திரங்கள் வாங்க
20 சதவிகிதம் மானியம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கோவை கொடிசியா வளாகத்தில் முதலாவது ஜவுளி தொழில் மாநாட்டை காணொலி மூலம் தொடங்கி வைத்த அவர், இதற்கென ஆண்டிற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

ஆயத்த ஆடை தொழிலில் நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

சென்னையில் இந்தியா சர்வதேச கல்வி மாநாடு 2026-ஐ இன்று துவக்கி வைத்ததோடு, ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம், குறளகம், தமிழ்நாடு அறிவுசார் திட்டம் உள்ளிட்டவற்றிற்கும் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் பேசியஅவர், சென்னையில் மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்குவதை தடுக்க 6 ஆயிரத்து 495 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

உச்சநீதிமன்றம்

பல்கலைக்கழக மானியக்குழுவின் 2026-ம் ஆண்டு ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்கு உச்சநீதிமன்றம் இன்று இடைக்கால தடை பிறப்பித்துள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய விதிமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்ட தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த ஒழுங்குமுறை கட்டமைப்பில் சில கருத்து வேறுபாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டிய நீதிமன்றம் இதனை வல்லுநர் குழு ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளது.

வரும் மார்ச் 19-ம் தேதிக்குள் பல்கலைக்கழக மானியக்குழு உரிய பதிலை வழங்கவும் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

அதுவரை 2012-ம் ஆண்டு UGC நடைமுறைகளை பின்பற்ற நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

KKSSR

தமிழ்நாட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் படிப்பு முடிக்கும் அனைவருக்கும் அவரவர் மாவட்டங்களிலேயே வேலைவாய்ப்பை உருவாக்கி தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் இரண்டாவது கட்டமாக 6 ஆயிரத்து 500 அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணாக்கருக்கு அரசின் விலையில்லா மடிக்கணினிகளை இன்று வழங்கி பேசியஅவர், இம்மாவட்டத்தில் ஏற்கனவே 8 ஆயிரத்து 740 பேருக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

திருப்பத்தூர்

திருப்பத்தூர் அரசு தலைமை மருத்துவமனையில் குழந்தைகளை தாக்கும் முதல்வகை நீரிழிவு நோய்க்கு உலகத்தரம் வாய்ந்த மருந்துகள் வழங்கப்படுவதாக மருத்துவர் சுவாமிநாதன் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தென்காசி

தென்காசி மாவட்டத்தில் 4-வது பொதிகை புத்தக கண்காட்சி நாளை தொடங்கி அடுத்தமாதம் 8-ம் தேதிவரை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூரில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் இன்று ஏராளமானோர் பங்கேற்றனர்.

நெடுஞ்சாலைத்துறை மற்றும் கட்டுமான பராமரிப்பு பிரிவுகளின் சார்பிலான இந்த பேரணியை ஆட்சித்தலைவர் திரு. ரத்தினசாமி இன்று தொடங்கிவைத்தார்.

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை உள்ளிட்ட 6 வட்டாட்சியர் அலுவலகங்களின் முன்பு ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கிராம நிர்வாக அலுவலர்கள் காத்திருப்பு போராட்டத்தில் இன்று ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பெஹ்ரைனில் நடைபெறும் மனாமா சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதி சுற்றில் சிந்தாந்த் பாந்தியா, சாஹேத் மைனேனி இணை - அமெரிக்காவின் கிர்க்கோ நெதர்லாந்தின் ஸ்டீபன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖